# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

பாடம் – 31

# உங்கள் எதிராளியாகிய சாத்தான்



## Your Adversary the Devil

Bible Research and Study Centre

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# உங்கள் எதிராளியாகிய சாத்தான்



# Your Adversary the Devil

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே,

இன்றைக்கு நாம் சாத்தானைக் குறித்த பாடத்தை பார்க்கலாம். சாத்தானைக் குறித்து கீழ்க்காணும் வசனத்தில் வாசிக்கலாம் -

**1பேதுரு 5: 8**

"தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள். ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித் திரிகிறான்"

இங்கு கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய விரோதியாகிய சாத்தானைக் குறித்து பேதுரு அப்போஸ்தலன் பேசுகிறார்.

- இந்த எதிராளியாகிய சாத்தான் என்பவன் யார்?
- அவனது குணாதிசயங்கள் என்ன?
- நாம் அவனைக் குறித்து என்ன அறிந்திருக்கிறோம்?
- சர்வ வல்லமையுள்ள தேவன், ஏன் இவனை இன்னும் உயிரோடு விட்டுவைத்திருக்கிறார்?

இவற்றுக்கெல்லாம் பதில் தெரியவேண்டும்.

- கிறிஸ்தவர்களில் அநேகர், சாத்தான் அழியாமை வாய்ந்தவன் என்றும், நரகமே அவனுடைய இருப்பிடம் என்றும், கூடுமானவரை ஆத்துமாக்களை தன் இருப்பிடத்துக்கு இழுத்துக்கொள்ள முயற்சிக்கிறான் என்றும் கருதுகின்றனர்.

இது உண்மையா? - இது உண்மையல்ல என்று நாம் கடந்த வகுப்புக்களில் வெளிப்படுத்தப்பட்டதை ஆராய்ந்தோம்.

- மேலும் சாத்தானுடைய தோற்றம் மற்றும் அவனது ரூபம் - அருவருப்பாயும், அவலட்சணமான தோற்றத்துடனும், இரண்டு கொம்புகள், வால் மற்றும், வெளியே நீண்டிருக்கும் பற்களுடன் இருப்பதாக கருதப்படுகிறான்.



உதாரணம் - இந்தியாவில் ஒளிபரப்பப்படும் ஒனிடா டிவியின் தொலைக்காட்சி பெட்டியின் விளம்பரம் - இது உண்மையா?

⇨ இந்த கேள்விகளுக்கு பதில்பெறவும், தெளிவான அறிவை அடையவும் வேத வசனங்களை ஆராய்வது அவசியம்.

⇨ சாத்தானைக் குறித்த நம்முடைய ஆராய்ச்சியை ஏழு பாகங்களாக பிரித்து, அவனுடைய வாழ்க்கை வரலாற்றை ஆராய்வோம்.

## 1. சாத்தானின் சிருஷ்டிப்பு நாட்கள்



சாத்தான் சிருஷ்டிக்கப்பட்டபோது இருந்த நிலைபற்றி வசனத்தில் வாசிக்கலாம் -

**ஏசாயா 14:12**

"அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே(லூசிபர்) நீ வானத்திலிருந்து விழுந்தாயே, ஜாதிகளை ஈனப்படுத்தியவனே, நீ தரையிலே விழ வெட்டப்பட்டாயே"

இங்கு "விடிவெள்ளி " என்பது பிரகாசத்தைக் குறிக்கும். இவன் தேவனுடைய ஒரு மகிமையான சிருஷ்டி என்பதும் விளங்குகிறது

"அதிகாலையின் மகன்" - அதிகாலை என்னும் அடையாளமானது ஒரு துவக்கத்தைக் குறிக்கிறது.

தேவனுடைய சிருஷ்டிகளில், வார்த்தையின் மூலமாக சிருஷ்டிக்கப்பட்ட முதலாவது மறைமுக சிருஷ்டி என்று வாசிக்கிறோம்-

யோவான் 1:3

"சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று, உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை"

தேவன் தம்முடைய சிருஷ்டிகளில் முதற்பேரானவராகிய இயேசுகிறிஸ்துவை நேரடியாக சிருஷ்டித்தார். இவரே தேவனது சிருஷ்டிப்பில் முதலாவதும், கடைசியுமானவர்.

வெளிப்படுத்தல் 22:16

"பிரகாசமான விடிவெள்ளி நட்சத்திரமுமானவரை.."

இரண்டாவது சிருஷ்டியாக லூசிபரை சிருஷ்டித்தார். இவ்வாறு லூசிபர், ஆதியிலிருந்த இரண்டு விடிவெள்ளி நட்சத்திரங்களில் ஒருவனாக இருந்தான்.

பூமியை நிலைப்படுத்தும்போது, இவர்கள் இருவரும் இசைந்தவர்களாக இருந்ததை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

யோபு 38:7

"அப்பொழுது விடியற்காலத்து நட்சத்திரங்கள் ஏகமாய்ப்பாடி.."

ஆதியில் தேவன் லூசிபரை சிருஷ்டித்தபொழுது எப்படிப்பட்டவனாக இருந்தான்? இதற்கான பதிலை வாசிப்போம் -

**எசேக்கியேல் 28: 12-15**

"மனுபுத்திரனே, நீ தீரு ராஜாவைக் குறித்துப் புலம்பி, அவனைநோக்கி - கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால், நீ விசித்திரமாய்ச் செய்யப்பட்ட முத்திரை மோதிரம். நீ ஞானத்தால் நிறைந்தவன். பூரண அழகுள்ளவன். நீ தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன். பத்மராகம், புஷ்பராகம், வைரம் படிகப்பச்சை, கோமேதகம், யஸ்பி, இந்திரநீலம், மரகதம், மாணிக்கம் முதலான சகலவித இரத்தினங்களும் பொன்னும் உன்னை மூடிக்கொண்டிருக்கிறது, நீ சிருஷ்டிக்கப்பட்டநாளில் உன்மேளவாத்தியங்களும் உன்நாகசுரங்களும் உன்னிடத்தில் ஆயத்தப்பட்டிருந்தது. நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேருப், தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன். அக்கினிமயமான கற்களின் நடுவே உலாவினாய். நீ சிருஷ்டிக்கப்பட்ட நாள் துவக்கி உன்னில் அநியாயம் கண்டுபிடிக்கப்பட்டதுமட்டும், உன் வழிகளில் குறைவற்றிருந்தாய்"

மேற்கண்ட வசனம் தீரு இராஜாவைக் குறிக்கிறதாக இது இருக்கிறது. ஆனால், வசனம் 13ல் "நீ தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன்" என்றும் வசனம் 14 ல் "நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேருப்" என்பதை நாம் கவனிக்கவேண்டும்.

மாம்சத்தில் இருக்கும் மனிதனாகிய தீருவின் இராஜாவை "ஒரு கேருப்" என்றும் தேவனுடைய தோட்டமாகிய "ஏதெனில்" இருந்ததாகவும் எப்படி குறிப்பிட முடியும்? ஆகவே இங்கு குறிப்பிடப்பட்டிருப்பது, மாம்சத்தில் இருக்கும் தீரு இராஜா அல்ல என்பதும், இந்த பூமிக்குரிய இராஜாவை தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்த "ஆவிக்குரிய" , கண்ணுக்கு புலப்படாத ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய சாத்தானை குறிக்கிறது.

இன்னும் ஒரு பழைய ஏற்பாட்டின் சம்பவத்திலிருந்தும் சாத்தானின் கிரியை வெளிப்படுகிறது. காபிரியேல் தூதன் தான் பூமிக்கு வர தாமதமானதற்குக் காரணத்தை தெரிவிக்கையில் இதைக் காண்கிறோம் -

**தானியேல் 10:13**

"பெர்சியா ராஜ்யத்தின் அதிபதி இருபத்தொரு நாள் மட்டும் என்னோடு எதிர்த்து நின்றான். ஆனாலும் பிரதான அதிபதிகளில் ஒருவனாகிய மிகாயேல் எனக்கு உதவியாக வந்தான். ஆதலால் நான் அங்கே பெர்சியாவின் ராஜாக்களிடத்தில் தரித்திருந்தேன்"

இங்கு குறிப்பிடப்பட்டிருப்பதும் மாம்சீக இராஜா அல்ல, மாறாக ஆவிக்குரிய இராஜாவாகிய சாத்தான் ஆகும். இப்பொழுது நாம் **எசேக்கியேல் 28:12-15** வசனங்களை வாசித்து லூசிபரைக் குறித்த சில முக்கியமான உண்மைகளை அறியலாம் -

வசனம் 12 "..நீ ஞானத்தால் நிறைந்தவன் பூரண அழகுள்ளவன்.."

- அவனுடைய பூரண அழகை கொஞ்சம் கற்பனைசெய்து பாருங்கள். பூரண அழகுள்ள ஒருவரைப் பார்ப்பது ஆச்சரியமும் அபூர்வமுமான காரியமாகும். இந்த ஞானத்தின் மூலமாக லூசிபர் மற்ற தூதர்களின்மீது ஆதிக்கம் செலுத்துபவராக இருந்திருக்கக்கூடும்.
அவன் 'ஞானத்தால் நிறைந்தவன்" - இன்றைய உலகில் அனைத்து மதங்களிலும் உள்ள புனித நூல்களையும், தத்துவங்களையும் தன் ஞானத்தினால் எழுதி, அனைத்து மதங்களையும் சாத்தானே உருவாக்கினான்.

வசனம் 13 'நீ தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன். பத்மராகம்,
புஷ்பராகம் வைரம், படிகப்பச்சை, கோமேதகம், யஸ்பி, இந்திரநீலம்,
மரகதம், மாணிக்கம், முதலான சகலவித இரத்தினங்களும்,
பொன்னும் உன்னை மூடிக்கொண்டிருக்கிறது "

யூதர்களின் பிரதான ஆசாரியனுடைய மார்க்கச்சையில் காணப்படும் 'விலையுயர்ந்த கற்கள்" - இங்கு வெவ்வேறு குணலட்சணங்களைக் குறிக்கிறது. உண்மையாகவே லூசிபர் பலவிதமான குணலட்சணங்களால் நிறைந்திருந்ததை இவ்வசனம் போதிக்கிறது. தொடர்ந்து வாசிக்கையில்

'நீ சிருஷ்டிக்கப்பட்ட நாளில் உன் மேளவாத்தியங்களும் உன் நாகசுரங்களும்
உன்னிடத்தில் ஆயத்தப்பட்டிருந்தது"

இது இசைக்கருவிகள் மற்றும் இசையைக் குறித்து பேசப்பட்டிருக்கிறது. லூசிபரிடத்தில் விசேஷமான திறமைகள் இருந்தது. அவன்ஒரு இசை மேதை. இன்றைய இசை உலகில் காணப்படும் பல்லாயிரக்கணக்கான பிரிவுகள் இதை உறுதிசெய்கிறது. அதோடுகூட, தன் இசை ஆற்றலைக்கொண்டு, இன்றைய இளைஞர்களை தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க முயல்கிறான்.

மேலும் தொடர்ந்து வாசிக்கையில்,

"நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட்ட கேருப்,
தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன்.
அக்கினிமயமான கற்களின் நடுவே உலாவினாய்



முதன்முதலில் சிருஷ்டிக்கப்பட்ட மனிதஜோடியாகிய ஆதாம் ஏவாளை பாதுகாக்க, தேவன் லூசிபரை பாதுகாக்கும் தூதனாக ஏதேனில் நியமித்திருந்தார்.

கனம்பொருந்திய பணியாகும்.

பின்பு நடந்ததை நாம் வாசிக்கையில் -

“தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன்.
அக்கினிமயமான கற்களின் நடுவே உலாவினாய்..”

நாம் முன்பே அறிந்திருக்கிறபடி, பரிசுத்த பர்வதம் என்பது தேவனுடைய இராஜ்யத்தையும், பரலோகத்திலிருந்து சர்வலோகத்தையும் ஆளுகைசெய்யும் அவருடைய ஆளுகையையும் குறிக்கிறது.

“அக்கினிமயமான கற்களின் நடுவே உலாவினாய..” - இங்கு அக்கினிமயமான கற்கள் என்பது சூரியன் போன்ற வானத்தின் நட்சத்திரங்களையும், தேவனுடைய தூதனாக பரந்து விரிந்த அண்டத்தில் உலாவும் கனம் பெற்றிருந்ததைக் குறிக்கிறது.

தொடர்ந்து நாம் வாசிக்கையில் -

வசனம் 15 “நீ சிருஷ்டிக்கப்பட்ட நாள் துவக்கி உன்னில் அநியாயம்
கண்டுபிடிக்கப்பட்டது மட்டும், உன் வழிகளில் குறைவற்றிருந்தாய்”

லூசிபர் மகிமையிலும் நீதியிலும் குறைவற்று குற்றமற்றவராய் தேவனால் பூரணமாக சிருஷ்டிக்கப்பட்டதை இவ்வசனம் தெளிவாகக் காண்பிக்கிறது. பின்பு நடந்தது என்ன?

“ உன்னில் அநியாயம் கண்டுபிடிக்கப்பட்டது ” - லூசிபர் பரிசுத்தமும் பூரணமுமான நிலையிலிருந்து விழுந்ததை குறிப்பிடுகிறது.அவன் எவ்வாறு வீழ்ந்தான் என்ற விபரங்களை இரண்டாம் பாகத்தில் காண்போம் -

## 2. சாத்தானின் வீழ்ச்சி

லூசிபா “ஏதேன் தோட்டத்தில்” இருந்தபொழுது அக்கிரமத்தில் “விழுந்தான்”. அவன் ஏன்? எப்படி விழுந்தான்? என்று வசனத்தில் வாசிப்போம் -



**எசேக்கியேல் 28:17**

“உன் அழகினால் உன் இருதயம்
மேட்டிமையாயிற்று, உன் மினுக்கினால் உன்
ஞானத்தைக் கெடுத்தாய்..”

⇨ லூசிபர் தன் ஞானம், வல்லமை மற்றும் அதிகாரத்தின் மேட்டிமையினால் விழுந்தது நமக்குத் தெரியவருகிறது.

⇨ எப்படி இவை சம்பவித்திருக்கும்? என்று யோசிப்போம். தேவன் புதிதாக சிருஷ்டித்து, ஏதேன் தோட்டத்தில் வைத்திருந்த ஆதாம் மற்றும் ஏவாளை பாதுகாக்கும் கனமுள்ளவேலையை, லூசிபரிடம் கொடுத்திருந்ததை நாம் வாசித்தோம்.

ஆனால் தேவன் சொல்லியிருந்த இரண்டு வாக்கியங்கள் லூசிபரிடம் ஒரு மிகப்பெரிய மாற்றத்தை கொண்டுவந்தது ..

**முதலாவது வாக்கியம்** -

ஆதியாகமம் 1:28

"பின்பு தேவன் அவர்களை நோக்கி - நீங்கள் பலுகிப்பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவ ஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி , தேவன் அவர்களை ஆசீர்வதித்தார் "

இந்த பூமியையும்அதிலுள்ள சிருஷ்டிகள் அனைத்தையும் ஆளும் அதிகாரத்தை தேவன் ஆதாமுக்கு கொடுத்திருந்தது, லூசிபருக்கு மிகப்பெரிய ஏமாற்றத்தை தந்தது. ஏனெனில் தன்னையே ஆளுகைக்கு தகுதியுள்ளவனாகவும், தனக்குத்தான் அந்த அதிகாரம் உண்டு என்றும் எண்ணியிருந்தான். தேவன் தன்னை சரியானபடி பயன்படுத்தவில்லை என்று கருதின லூசிபருக்கு, அவர்மேல் கசப்புணர்வு ஏற்பட்டது.

அதன்பின்பு,தேவனிடமிருந்து வெளிப்பட்ட இரண்டாவது வாக்கியம், தேவனுடைய நோக்கங்களை புரிந்துகொள்ளமுடியாமல், தவறான முடிவுகள் எடுக்க நடத்தினது -

**இரண்டாவது வாக்கியம்** -

ஆதியாகமம் 2:16-17

" தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி.. நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம் அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்"

லூசிபரின் இருதயத்தில் சந்தேகம் எழுந்திருந்ததால், ஆதாம் ஏவாளுக்கு தேவன் கீழ்ப்படிதலுக்கான சோதனையை வைத்ததன் நியாயமான காரணத்தைப் புரிந்துகொள்ளவில்லை. தேவன் அவர்கள்மீது நியாயமில்லாமல் கட்டுப்பாடுகள் விதித்ததாக அவர்நினைத்தார்.

தன்னை தேவனுக்கும் மேலாக உயர்த்தத் துவங்கினார். தேவ ஞானத்தைக்காட்டிலும் தனது ஞானம் உயர்ந்தது என்று நிலைநிறுத்த எண்ணினார்.
இதனால் ஏவாளை பொய்யினாலும் வஞ்சனையினாலும் ஏமாற்றினார்.

வசனம் 4 " நீங்கள் சாகவே சாவதில்லை". இவ்விடத்தில், தேவனுடைய வார்த்தைகளை மறுத்து, அதற்கு விரோதமாக பேசினதின்மூலம் தேவனுடைய எதிராளி அல்லது சாத்தானாக மாறினார்.

சாத்தானின் இத்தகைய செயல்பாடுகளைக்குறித்தே கர்த்தர் கூறினார்-

யோவான் 8:44

"அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்.

சத்தியம் அவனிடத்திலில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலைநிற்கவில்லை.
அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிருக்கிறபடியால்
அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப்பேசுகிறான்"

பொய்களுக்குப் பிறப்பிடமும் துவக்கமும் சாத்தானே என்பது நிரூபணமாகிறது. அதேபோல், ஆதிப்பெற்றோரை பாவ வழியில் வழிநடத்தி, பாவத்தின் சம்பளமாகிய மரண தண்டனையை பெற்றுத் தர சாத்தானே காரணமாயிருந்ததும் இயேசுவின் வார்த்தைகளில் தெளிவாகிறது.

தேவனிடமிருந்து சாத்தான் பெற்ற சாபத்தைக் குறித்து நாம் வாசிப்போம் -

ஆதியாகமம் 3:14

"அப்பொழுது தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து -
நீ இதைச்செய்தபடியால் சகல நாட்டு மிருகங்களிலும் சகல காட்டு மிருகங்களிலும்
சபிக்கப்பட்டிருப்பாய், நீ உன் வயிற்றினால் நகர்ந்து,
உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய்"

சர்ப்பம் மண்ணைத் தின்பதில்லை என்பதை நாம் அறிவோம். இந்த வசனங்களில் கூறப்பட்டவை அடையாள பாஷையில் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனமாகும். ஆகவே இங்கு சொல்லப்பட்ட அடையாளங்களை நாம் காணலாம் -



"நீ உன் வயிற்றினால் நகர்ந்து" - பூமியின்மீது இரண்டு கால்களைக் கொண்டு நடக்கிற மனிதன் மகிமை உள்ளவனாக இருக்கிறான். இது நான்கு கால்களுள்ள விலங்குகளைக் காட்டிலும் உயர்வான நிலையாகும். அதுபோல் "கால்கள் இல்லாமல் இருப்பது" கனவீனமான நிலைக்கு அடையாளமாக இருக்கிறது. இவ்வாறு சாத்தான் தன்னுடைய வீழ்ச்சிக்குப் பின்னர், கனவீனமான நிலைக்கு தாழ்த்தப்பட்டு, அவர் பெற்றிருந்த ஆவிக்குரிய, பரலோகத்துக்குரிய மகிமையை இழந்தார்.

''உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய் " - ஒருவரது தோல்வியை குறிப்பிடும்போது, "அவன் மண்ணைக் கவ்வினான்" என்று சொல்கிறோமே.. அதுபோலவே, சாத்தானும் தன்னுடைய மீதமுள்ள காலத்தை இந்த மண் உலகான பூமியில் கழிப்பதையும், இனி அவன் பரலோகம் செல்ல அனுமதிக்கப்படாததையும் குறிக்கிறது(யோபு முதலாம் அதிகாரத்தில் சாத்தான் தேவனை சந்தித்துப் பேசும் பகுதியை நேரடியாகப் புரிந்து கொள்ளக்கூடாது. காரணம் அது நாடக பாணியில் எழுதப்பட்டிருக்கிறது)

இவ்வாறு, சாத்தான் பூமியோடு கட்டுப்படுத்தப்பட்ட, விழுந்துபோன நிலைமையை இயேசு குறிப்பிடுகிறார் -

**1+39+6 = 46 வருடங்கள்**

**லூக்கா10:18**

“சாத்தான் மின்னலைப்போல வானத்திலிருந்து விழுகிறதைக் கண்டேன்”

“ பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமாகிய ” இயேசு, மற்றொரு “விடிவெள்ளியாகிய ” லூசிபர் விழுந்துபோனதைக் குறித்து பேசும் வசனமாகும். லூசிபர், தன் பரலோக அதிகாரம், மகிமை, உரிமைகள் எல்லாவற்றையும் இழந்து, விழுந்துபோனதைக் குறிக்கிறது.

பூமிக்குத் தள்ளப்பட்ட பின்பும் சாத்தான் தன் இலட்சியத்தை தொடர்ந்து நடத்துவதை மூன்றாம் பாகத்தில் காணலாம் -

## 3. சாத்தானின் இலட்சியங்கள்

**ஏசாயா 14:13-14**

“நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக
என் சிங்காசனத்தை உயர்த்துவேன். வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின்
பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில்
ஏறுவேன், உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும்
நீ உன் இருதயத்தில் சொன்னாயே. ஆனாலும்
நீ அகலமான பாதாளத்திலே தள்ளுண்டு போனாய்..”

இது ஏதேனில் விழுந்தபின்பு, சாத்தானுடைய இருதயத்தில் தோன்றின முதல் இலட்சியமாகும். மனுக்குலத்தின் பூலோகக் காரியங்களின்மீது ஆவிக்குரிய அல்லது கண்ணுக்குப் புலப்படாத ஆளுகையைக் கைப்பற்ற முயற்சித்தான்.
இவ்விதமாக, அவன் தன்ஆதிக்கத்தை மனுக்குலத்தின்மீது செலுத்தி, தேவன் ஆதாமுக்கு பூமியை ஆளுவதற்கு கொடுத்திருந்த அதிகாரத்தை அபகரித்தான்.

பின்பு அவனது அடுத்த இலட்சியம் என்னவென்று வாசிப்போம் -

“தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன ˙” - இங்கு “தேவனுடைய நட்சத்திரங்கள ˙” எனப்படுபவர்கள் - பிரதான தூதனாகிய மிகாயேல் தேவனுடைய நட்சத்திரங்களில் ஒருவர் என்று நாம்அறிவோம். மற்ற நட்சத்திரங்களாகிய தேவனுடைய விசேஷமான ஆவிக்குரிய சிருஷ்டிகள் யார்? அவர்களைக் குறித்து வாசிப்போம்

**கலாத்தியர் 1:16**

“ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது.
பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய
காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும்,
சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும்,
அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும்
அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது”

“தேவனுடைய மற்ற நட்சத்திரங்கள்” - சர்வலோகத்திலும் வல்லமை செலுத்துகின்ற விசேஷமானஆவிக்குரிய சிருஷ்டிகளாகிய இவர்கள் - சிங்காசனங்கள் அதிகாரங்கள் துரைத்தனங்கள் என்று குறிப்பிடப்படுகிறது. இதை நாம் எப்படி கூறமுடியும்? இதைக் குறித்து நாம் வாசிப்போம் -

**எபேசியர் 1: 20**

“எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவங்களுக்கும், இம்மையில் மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் மேலாய் அவர் உயர்ந்திருக்கத் தக்கதாக..”

இயேசு உயிர்த்தெழுப்பப்பட்டபோது, அவர் எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும் மேலாக உயர்த்தப்பட்டதாக சொல்கிறது.

சாத்தான் எவ்வகையில் தன் சிங்காசனத்தை “தேவனுடைய நட்சத்திரங்களுக்கு” மேலாக உயர்த்த திட்டமிட்டான்?

“வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும்..”
“வட திசை” என்பது “தேவனுடைய வாசஸ்தலமாகிய பரலோகத்தைக்” குறிக்கிறது -

**சங்கீதம் 48:2**

“வடதிசையிலுள்ள சீயோன் பர்வதம் வடிப்பமான ஸ்தானமும் சர்வ பூமியின் மகிழ்ச்சியுமாயிருக்கிறது, அதுவே மகாராஜாவின் நகரம்”

தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக வல்லமையிலும், அதிகாரத்திலும் மாத்திரம்அல்ல, அதற்கும் மேலாக ஒரு படி சென்று ஒரு தேவனாக, ஆராதனைக்கு உரியவராக மாறவேண்டும் என்ற சாத்தானுடைய விருப்பத்தை இந்த வசனம் குறிக்கிறது.

அவனது அடுத்த இலட்சியத்தைக் குறித்து வாசிக்கையில் -

“..நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்..”

அவன் சுயமேன்மை, மகிமையை உயர்த்தி, தேவனுடைய சிருஷ்டிகள் அனைத்திற்கும் மேலான நிலையை அடையவேண்டும் என்று நாடினான்.

“உன்னதமானவருக்கு ஒப்பாவேன் என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே..”

தேவனுடைய சிருஷ்டிகள் அனைத்துக்கும் மேலாக பிதாவாகியதேவனே இருக்கிறார். சர்வ லோகத்தையும் ஆளும் தேவனைப்போல மாற முயற்சித்தான்.

தேவன் தம் வார்த்தைகளின் மூலம் பேசுவதுபோன்று சாத்தானும் தன்னுடைய உலகத்தின் மூலம் பேசுகிறான்.




சமீப நாட்களில் **ரீபோக்(REEBOK)** என்ற காலணி நிறுவனம், தன் விளம்பரத்தில்,

பயன்படுத்தியிருக்கிற வார்த்தைகள், தேவன் தமது நாமத்தை தெரியப்படுத்தினபோது உச்சரித்த வார்த்தைகளுக்கு ஒப்பாகவே இருப்பதைக் காணமுடிகிறது.

**I am What I am - இருக்கிறவராகவே இருக்கிறேன்**

சாத்தானின் இந்த இலட்சியங்கள் அனைத்தும் படிப்படியாக வளர்ச்சியடைந்து, இந்த பிரபஞ்சத்தின் தேவனாக அதிகாரத்தைக் கைப்பற்றும்வரை நீடித்தது.

அடுத்து, சாத்தானின் வாழ்க்கையைக்குறித்த நான்காம் பாகத்திற்கு வருவோம்

## 4. சாத்தானின் ஆளுகை

இதைக்குறித்து வாசிக்கையில்,

**எபேசியர் 2:2**

“கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில்
இப்பொழுது கிரியை செய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய
ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள்..”

சாத்தான் தன்வீழ்ச்சிக்குப் பின்பு, இப்பூமியில் கண்ணுக்குப் புலப்படாத ஆவிக்குரிய அதிபதியாக இருக்கிறான் என்று குறிக்கிறது. இந்த உண்மையை இன்னும் சில வசனங்களை வாசித்து உறுதிப்படுத்திக்கொள்ளலாம் -

**1கொரிந்தியர் 4:4**

“தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி,
அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின்
தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்”

அப்போஸ்தலனாகிய பவுல் மேற்கண்ட வசனத்தில், இப்பிரபஞ்சத்தின் தேவன் என்று குறிப்பிடுகின்றார். நம் ஆண்டவராகிய இயேசுவும்கூட அவனை “இந்த உலகத்தின் அதிபதி” என்று பின்வரும் வசனத்தில் குறிப்பிடுகிறார் -

**யோவான் 14:30**

“இனி நான் உங்களுடனே அதிகமாய்ப் பேசுவதில்லை. இந்த உலகத்தின் அதிபதி
வருகிறான். அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை”

அவனுக்கு இந்த வல்லமையைக் கொடுத்தது யார்? இதை சாத்தான் தன்னுடைய வார்த்தைகளிலேயே கூறுவதை வாசிப்போம் -

**லூக்கா 4: 6**

“இவைகள் எல்லாவற்றின்மேலுமுள்ள அதிகாரத்தையும் இவைகளின்
மகிமையையும் உனக்குத் தருவேன், இவைகள் எனக்கு
ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது. எனக்கு இஷ்டமானவனுக்கு இவைகளைக்
கொடுக்கிறேன்”

☆ சாத்தான் இந்த அதிகாரத்தினை எடுத்துக்கொள்ள தேவன் ஞானமாக அனுமதியளித்திருக்கிறார், அதை மனுக்குலத்தின் ஆசீர்வாதத்திற்கென்றே செய்திருக்கிறார்.

☆ சாத்தானும் அவனோடு இருக்கும் விழுந்துபோன தூதர்களும், தேவதிட்டத்தின் முதலாம் மற்றும் இரண்டாம் உலகங்களில், இந்த தீமைநிறைந்த ஆளுகைசெய்ய அனுமதிக்கப்பட்டிருந்தாலும், இந்த இரு உலகங்களும் முடிவிற்கு வருவது நிச்சயம்.

☆ சாத்தான் வஞ்சனையின் மூலம் ஆளுகை செய்து வருகிறான்.

எப்படிப்பட்ட வஞ்சகங்களை செய்துவருகிறான் என்று ஐந்தாம் பாகத்தில் காண்போம் -

## 5. சாத்தானின் வஞ்சகங்கள்

சாத்தான் பூமியின் ஆகாயவிரிவில், அதாவது பாதாளத்தில்(டார்டரஸ்), விழுந்துபோன மற்ற தூதர்களுடன் வைக்கப்பட்டிருப்பதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

**2பேதுரு 2:4**

"பாவஞ்செய்த தூதர்களை தேவன் தப்பவிடாமல், அந்தகாரச் சங்கிலிகளினாலே கட்டி நரகத்திலே தள்ளி, நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக ஒப்புக்கொடுத்து.."

இந்த "அந்தகாரச்சங்கிலிகள்" என்பது கீழ்ப்படியாத தூதர்கள்அல்லது பிசாசுகள் இருக்கிற இடத்தையும், அவர்களது நிலையையும் குறிக்கிறது.

"அந்தகாரம்"- என்பது இவ்வுலகம் இப்பொழுது இருக்கும் நிலைமை என்று வாசிக்கிறோம் -

ஏசாயா 60:2 "இதோ, இருள் பூமியையும், காரிருள் ஜனங்களையும் மூடும்"

"சங்கிலி" - என்பது சாத்தானும், விழுந்துபோன தூதர்களும் , பூமியில் ஆகாயவிரிவைவிட்டு தேவனுடைய அண்டத்தில் சுதந்திரமாக செயல்படாதபடி, கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதைக் குறிக்கிறது. இதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

**எபேசியர் 6:12**

"வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும்.."

ஒருவேளை ஆவிக்குரிய ஜீவிகளை பார்க்கக்கூடிய கண்களை நாம் பெற்றிருந்தால், அவர்கள் நம்மைசுற்றி பறந்துகொண்டிருப்பதை காணமுடியும்.

அந்த வான மண்டலங்களிலிருந்து, அவர்கள் ஆவிக்குரிய ஆதிக்கத்தை அல்லது அதிகாரத்தை செலுத்துவதை வாசிக்கிறோம் -

**எபேசியர் 2:2**

"..கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்து கொண்டீர்கள்"

தன் ஆலோசனைகள் மூலம் பாவ வழிக்கு வழிநடத்தும் சாத்தானுடைய தந்திரங்கள்,

சோதனைகள் மற்றும் வஞ்சனைகளுக்கு முழுவதுமாக கீழ்ப்பட்டிருக்கும்படி பலவீனமாக்கப்பட்ட சிந்தனையோடிருக்கும் ஒட்டுமொத்த மனுக்குலத்தின் நிலை இங்கு கூறப்படுகிறது. இதற்கான உதாரணத்தை யூதாஸ் காரியோத்தின் விஷயத்தில் காண்கிறோம் -

**யோவான் 13: 2**

"சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து அவரைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டினபின்பு, அவர்கள் போஜனம் பண்ணிக்கொண்டிருக்கையில்.."

மேலும், இவ்வுலகம் மற்றும் குடும்பங்கள் மற்றும் தனிப்பட்ட நபர்களுடைய வாழ்க்கையில் காணப்படும் எல்லாத் தீமைகளுக்கும், இந்த சாத்தானும், விழுந்துபோன தூதர்களுமே காரணமாக இருக்கிறார்கள்.

ஆனால் பரிபூரண மனிதனான இயேசு, வனாந்தரத்தில் நாற்பதுநாள் உபவாசத்திற்குப் பின்பு சாத்தானால் கொடுக்கப்பட்ட மூன்று ஆலோசனைகளை புறக்கணித்தார் ( **மத்தேயு 4:3,4**).

ஆனால் சாத்தான் மனுக்குலத்தை இதுவரையில் அதிகதிகமான வஞ்சனையில் வீழ்த்தி வருகிறான். எந்த வகையில் நிறைவேற்றுகிறான் என்பதை வசனத்தில் வாசிக்கலாம் -

**1கொரிந்தியர் 4:4**

"இப்பிரபஞ்சத்தின் தேவனானவன், அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்"

அவன் அனைத்து ஜனங்களின் "மனதை" - அதாவது புரிந்து கொள்ளும் கண்களை குருடாக்கியுள்ளான். "புரிந்து கொள்ளும் கண்கள்" மூலமே ஒரு கிறிஸ்தவன் தேவனையும் இயேசுகிறிஸ்துவையும் காண்பதை நாம் வாசிக்கிறோம் -

**எபேசியர் 1:19**

"..நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்கு பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்கிறேன்"

சாத்தான் எப்படி மனக்கண்களைக் குருடாக்குகிறான்? இதற்கான பதிலை வாசிக்கையில் -

**ஏசாயா 5:20**

"தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் சொல்லி, இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாகப் பாவித்து, கசப்பைத் தித்திப்பும், தித்திப்பை கசப்புமென்று சாதிக்கிறவர்களுக்கு ஐயோ.."

சாத்தான் இந்த உலக மக்களை, அநீதியான காரியங்களை நீதியைப்போல் போலியாக வெளிப்படுத்தி, அநீதியில் அவர்களை வழிநடத்துகிறான். இவ்விதமாக நன்மையான காரியம் தீமை என்றும், தீமையான காரியம் நன்மையென்றும் கருதப்படுகிறது. இதனால் தீய பழக்க வழக்கங்களாகிய சூதாட்டம், புகைபிடித்தல், மது அருந்துதல், வேசித்தனம், பொய் பேசுதல் போன்றவை துணிகரமாக செய்யப்படுகிறது. மேலும் "சத்தியமாகிய ஒளி" - அசத்தியமாகிய இருளாகவும், "அசத்தியமாகிய இருள்"- சத்திய ஒளியாகவும் மாற்றப்படுகிறது .

இதன்மூலம் நரகம், ஆத்துமா, மரித்தோரின் உயிர்த்தெழுதல், தேவனுடைய சுபாவம் பற்றின உண்மை வேத போதனைகள், இருளை வெளிச்சமாக நம்புகிற கிறிஸ்தவர்களுக்கு ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் தருகிறது.

இதுபோலவே கசப்பான பாவ வழி தித்திப்பாக கருதப்படுகிறது. மேலும் தித்திப்பான நீதியின் வழிகள் கசப்பானதாக மாற்றப்பட்டு, விரும்பப்படாததாக கருதப்படுகிறது. உதாரணம் - கெட்டவார்த்தை பேசுதல் இன்று நாகரீகமாகக் கருதப்படுகிறது.

சாத்தானுடைய வஞ்சனைகளை குறித்து நாம் தொடர்ந்து வாசிக்கையில் -

**சங்கீதம் 96:5**

"சகல ஜனங்களுடையதேவர்களும் விக்கிரகங்கள்தானே.."

மனிதன் தன் சிந்திக்கும் திறனைப் பயன்படுத்தி தேவனை தேடுவான் என்றறிந்து, இவ்வுலகில் காணப்படும் அனைத்து மதங்கள் மற்றும் அவைகளின் பரிசுத்தநூல்கள் மற்றும் போலிஉபதேசங்களை உருவாக்கி, தொடர்ந்து வஞ்சிக்க முயற்சித்தான்.

மேலும் தேவன் தம் 'ஒரே பேரான குமாரனை" இந்த உலகின் இரட்சகராக இருக்க அனுப்பினபோது, போதகராக வந்த அவரையே வஞ்சிக்க சாத்தான் முயற்சித்தான். எப்படி என்று நாம் வாசிப்போம் -

**1கொரிந்தியர் 11:14,15**

"அது ஆச்சரியமல்ல,சாத்தானும் ஒளியின்தூதனுடைய வேஷத்தை
தரித்துக்கொள்வானே. ஆகையால்அவனுடைய ஊழியக்காரரும் நீதியின்
ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டால் அது ஆச்சரியமல்லவே,
அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக்குத் தக்கதாயிருக்கும்"

இவ்வசனத்தில் ஒளியின் தூதன் என்று இயேசுவை குறிப்பிடப்பட்டிருக்கிறது. இக்கருத்தை கீழ்க்காணும் வசனங்கள் உறுதிப்படுத்துகின்றன -

**யோவான்1:9**

"உலகத்திலே வந்து எந்தமனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே
அந்த மெய்யான ஒளி"

**யோவான் 12:36**

"ஒளி உங்களோடிருக்கையில் நீங்கள் ஒளியின் பிள்ளைகளாகும்படிக்கு
ஒளியினிடத்தில் விசுவாசமாயிருங்கள் என்றார்.."

இந்த வசனத்திலிருந்து, சாத்தான் இயேசுவின் தூதனைப்போல் அல்லது சத்தியத்தின் தூதனைப்போல் வேஷந்தரிப்பான் என்பதை அறியலாம். எவ்வாறு?

இந்த சுவிசேஷயுகத்தில் சாத்தான் தன்னை இயேசுவினுடைய அமைப்பாக ஒரு பொய்யான அமைப்பை ஸ்தாபித்து நிறைவேற்றுவான். ஆனால் இந்த அமைப்பு வேதத்தில் அங்கீகரிக்கப்படாத உபதேசங்கள் மற்றும் போதனைகளை போதித்து, மகா பரிசுத்தமான விசுவாசத்தை சேதப்படுத்தும். இந்த அமைப்பு உருவாகும் விதத்தைக் குறித்து

அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார் -

**2கொரிந்தியர் 11:4**

"எப்படியெனில், உங்களிடத்தில் வருகிறவன் நாங்கள் பிரசங்கியாத வேறொரு இயேசுவைப் பிரசங்கித்தானானால் அல்லது நீங்கள் பெற்றிராத வேறொரு ஆவியையும் , நீங்கள் ஏற்றுக்கொள்ளாத வேறொரு சுவிசேஷத்தையும் பெற்றீர்களானால், நன்றாய் சகித்திருப்பீர்களே"

☆ இது வேறொரு இயேசுவை அடிப்படையாகக் கொண்டு இயங்கும் வேறொரு (பரிசுத்த) ஆவி.

தேவனுடையதும் கிறிஸ்துவுடையதுமான "சகல சத்தியத்திற்குள்ளும் .. வரப்போகிற காரியங்களைஅறிவித்து நடத்தும் (யோவான் 16:13) - பரிசுத்தஆவியல்லாத வேறொரு ஆவியை இது கொண்டிருக்கும். இதைக்குறித்து பின்வரும் வகுப்புக்களில் விரிவாக பார்க்கலாம்.

இப்படியிருக்க, இயேசுவைஉண்மையாக பின்பற்றுபவர்களைக்குறித்த காரியம் என்ன?வாசிப்போம் -

**2கொரிந்தியர்2:11**

"சாத்தானாலே நாம் மோசம்போகாதபடிக்கு அப்படிச்செய்தேன். அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே"

☆ இங்கு 'தந்திரங்கள்' என்பது வஞ்சனைகளே. எப்படி சாத்தானுடைய வஞ்சனைகளை எதிர்த்து, தப்பிப்பது?

தேவனுடைய வார்த்தைகளில், சாத்தானைப் பற்றியும், அவனுடைய வஞ்சனைகளைப் பற்றியும் வெளிப்படுத்தியிருப்பதை அறிவதன்மூலமே சாத்தியமாகும். இவ்விதமாக, தேவனுடைய வார்த்தையானது ஆவிக்குரிய யுத்தத்திற்கான பட்டயமாக(எபேசியர்6:7) அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் கிறிஸ்தவர்களில் பெரும்பான்மையானவர்களைக் குறித்த தீர்க்கதரிசனத்தை வாசிப்போம் -



**ஓசியா 4:6**

"என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்"

வேத ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம்கொடுக்காததினால் கிறிஸ்தவர்களில் பெரும்பான்மையானோர் சாத்தானுடைய வஞ்சனையில் நாசமடைகின்றனர்.

அடுத்து , நாம் சாத்தானுடைய எதிர்காலத்தைக் குறித்து ஆறாம் பாகத்தில் காண்போம் -

## 6. சாத்தான் கட்டப்படுதல்

சாத்தான் மற்றும் அவனுடைய வஞ்சனையான கிரியைகள்,

அவனது வல்லமைகள் அனைத்தும் முழுவதுமாக கட்டப்படும். அவன் கட்டப்படுதலைக் குறித்து நாம் வாசிக்கையில் -

**வெளிப்படுத்தல் 20:2,3**

"பிசாசு என்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன் பிடித்து அதை ஆயிரம் வருஷமளவுங் கட்டிவைத்து.."

ஆயிரவருட அரசாட்சி முடிவடையும் வரைக்கும் சாத்தான் கட்டப்பட்டிருக்க வேண்டும். இதனால் அனைவரும் பாவத்திலிருந்து குணமாக்கப்பட்டு, தேவனுடைய சத்தியங்களை தெரிந்துகொள்ளும் வாய்ப்பைபெறுவர்

**ஏசாயா 29:18-20**

"அக்காலத்திலே செவிடர் புஸ்தகத்தின் வசனங்களைக் கேட்பார்கள். குருடரின் கண்கள் இருளுக்கும் அந்தகாரத்துக்கும் நீங்கலாகிப் பார்வையடையும். சிறுமையானவர்கள் கர்த்தருக்குள் மிகவும் மகிழ்ந்து, மனுஷரில் எளிமையானவர்கள் இஸ்ரயேலின் பரிசுத்தருக்குள் களிகூறுவார்கள். கொடியவன் அற்றுப்போவான், சக்கந்தக்காரன் இல்லாமற்போவான்"

அனைவருடைய கண்களும் காதுகளும் திறக்கப்பட்டு, தேவ புத்தகமாகிய வேதாகமத்திலிருந்து தேவவார்த்தையை புரிந்துகொள்வார்கள்.

இவ்விதமாக சாத்தான் கட்டப்பட்டிருக்கும்போது, பூமியானது தேவனுடைய சத்தியத்தினால் நிரப்பப்பட்டிருக்கும் என்று வாசிக்கிறோம் -

"சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தருடைய மகிமையைஅறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்"

அப்பொழுது மனுக்குலத்தில் உள்ளஅனைவரும் தங்களது பாவத்திலிருந்து குணமாகும்படி, தேவ வார்த்தையில் இருக்கும் சத்தியத்தை அந்நாட்களில் பெற்றுக்கொள்வார்கள்.

இப்பொழுது சாத்தானுடைய வாழ்க்கை வரலாற்றின் ஏழாவதும் இறுதியுமான பாகத்தினைப் பார்ப்போம்.

## 7. விடுதலை மற்றும் இறுதி அழிவு

இறுதியாக, சாத்தான் கட்டப்பட்டு1000 வருடம் முடிந்தபிறகு, மீண்டும் சாத்தான் விடுதலையாக்கப்படுகிறான். இதைக் குறித்து பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம் -

**வெளிப்படுத்தல்20:3**

" அதற்குப்பின்பு அது கொஞ்சக்காலம் விடுதலையாகவேண்டும்"

அந்த ஆயிரவருடம் முழுவதுமாக நிறைவேறினபிறகு, சாத்தான் விடுவிக்கப்பட்டு, மறுபடியும் வஞ்சிக்கும் வல்லமை அனுமதிக்கப்படும் காலமாக இருக்கிறது.

இது 'கொஞ்சக்காலம்' என்றழைக்கப்படுகிறது. அவ்வேளையில், முழுமையாக பிரகாசிப்பிக்கப்பட்டு, பரிபூரணத்தை அடைந்த மனுஷ ஜாதியை

வஞ்சிக்க மறுபடியும் முயற்சி செய்வான். இந்த காலகட்டத்தைக் குறித்து வேதம் குறிப்பிடுகையில், மனுக்குலம் 'நீதியின் வழிகளிலிருந்து" விலகி, சாத்தானுடைய வஞ்சகத்தின்மூலம் கீழ்ப்படியாமைக்குள் விழுவதற்கு ஏதுவான கொஞ்சகாலம் என்று கூறுகிறது. இதுவே மனித ஜாதிக்கு இறுதியான சோதனையாகும்.

இதன்பின்பு முடிவு உண்டாகும். அப்பொழுது சாத்தான் அழிக்கப்படுவதோடு, மனந்திரும்ப விரும்பாமல் சாத்தானின் குணலட்சணங்களை பிரதிபலித்த, தீமையையும் அக்கிரமத்தையும் விரும்பும்தூதர்களும் மனிதர்களும் அழிக்கப்படுவர். இதை பின்வரும் வசனத்தில் வாசிக்கிறோம்-

**வெளிப்படுத்தல் 20:9**

" அப்பொழுதுதேவனால்வானத்திலிருந்துஅக்கினிஇறங்கிஅவர்களைப்பட்சித்துப்போட்டது"

ஆம். இது பின்வரும் வசனத்திலும் குறிப்பிடப்படுகிறது -

**மத்தேயு 25:41**

" சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன்தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்தியஅக்கினியிலே போங்கள்"

இங்கு அக்கினி என்பது தேவனுடைய நியாயத்தீர்ப்புகளையும், தண்டனையையும் அடையாளப்படுத்துகிறதை வாசிக்கிறோம் -

வசனம் 46 " அந்தப்படி இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும்"

- ☆ நித்திய ஆக்கினை எனும் தண்டனை நித்தியஜீவனுக்கு எதிராக, நித்தியமரணத்திற்கு அடையாளமாக உள்ளது.
- ☆ துணிகரமானபாவத்தை நடப்பிக்கும் அனைத்து பாவிகளுக்கும் தேவன்தரும் இறுதி தண்டனை இதுவாகும்.

**பாவத்தின் சம்பளம் மரணம்(ரோமர் 6:23).**

இறுதியாக, சாத்தான்எப்படி மரிப்பான்? இதைக்குறித்து வேதம்உரைப்பதை வாசிக்கலாம் -

**எசேக்கியேல்28:18,19**

" உன்னைப் பட்சிப்பதாகிய ஒரு அக்கினியை நான் உன் நடுவிலிருந்துபுறப்படப்பண்ணி, உன்னைப் பார்க்கிற எல்லாருடைய கண்களுக்கு முன்பாகவும் பூமியின்மேல் சாம்பலாக்குவேன். ஜனங்களில் உன்னை அறிந்த அனைவரும் உன்னிமித்தம் திகைப்பார்கள். மகாபயங்கரமாவாய். இனி ஒருபோதும் இருக்கமாட்டாய் என்று உரைக்கிறார் என்று சொல் என்றார்"

இது வானத்திலிருந்து வரும் " அக்கினி", மின்சார தாக்குதலினால் நடக்கும் மரணத்தைக் குறிக்கிறது. மனுக்குலத்தில் உள்ள அனைவரும் மாம்சத்தில் மனிதனைப் போல வெளிப்பட்டு சாத்தான் மரணத்திற்குள்ளாகும் இந்தக் காட்சியை காண்பார்கள். இதற்கு உதாரணமாக,

**லேவியராகமம் 10:1,2**

" பின்பு ஆரோனின் குமாரராகிய நாதாபும் அபியூவும் தன்தன் தூபகலசத்தை

எடுத்து, அவைகளில் அக்கினியையும் அதின்மேல் தூபவர்க்கத்தையும் போட்டு,
கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிடாத அந்நிய அக்கினியை அவருடைய
சந்நிதியில் கொண்டுவந்தார்கள். அப்பொழுது அக்கினி கர்த்தருடைய
சந்நிதியிலிருந்து புறப்பட்டு அவர்களைப் பட்சித்தது.
அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் செத்தார்கள்"

இவ்வாறு சாத்தான் முழுமையாகவும், நிரந்தரமாகவும் அழிக்கப்படுவான்.

**ஏசாயா 4:15** 'ஆனாலும் நீ அகாலமான பாதாளத்திலே தள்ளுண்டுபோனாய்"

இது பாதாளத்தில் மரித்தநிலையில் சாத்தான் இறுதியாக மரிப்பதை குறித்த தெளிவான சாட்சியாகும். இது ஜீவன் முற்றிலுமாக அழியக்கூடிய இரண்டாம் மரணமாகும்.

☆ இவ்விதமாக தேவனுடைய எதிராளியாக மாறினவனுடைய வாழ்க்கை சரித்திரம் முடிவுக்கு வருகிறது.

☆ இது நமக்கு ஒரு எச்சரிப்பின் பாடமாக இருக்கிறது. பெருமை மற்றும் அதன் விளைவுகளையும், தேவ நீதிக்கு எதிரான வழியில் பயணிப்பதன் விளைவுகளைபோதிக்கிறது.

**நாம் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க**
**தேவ கிருபை தொடர்ந்து நம்மை வழிநடத்துவதாக ஆமென்.**



**இந்த சத்தியங்களை பற்றி மேலும் அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்:**
For Further Details Please Contact:
bibleresearchandstudy@gmail.com, victorgnanaraj01@gmail.com victor_vicky
+919443321874 https://www.facebook.com/bibleresearch/